REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 31உ திங்கள் (17—10—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 1உ செவ்வாய் (18—10—55) [இதழ் 106

## கன்னடியர் எச்சரிக்கை

ஹூப்ளி, அக். 17—

பெல்லாரி சிறுகுப்பா, ஹோஸ்பெட் ஆகிய தாலுகாக்களை ஆந்திராவுடன் இணைப்பதில்லை (2) பல்வேறு பகுதிகள் உள்ள கன்னடப் பிரதேசங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ள கன்னட மாநிலத்தில் இணைக்கப்படும் (3) கர்நாடக எல்லைகளை வகுப்பதற்காக எல்லைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்று வரும் நவம்பர் 15-ந் தேதிக்குள் உறுதி மொழி தராவிட்டால் கர்நாடகம் முழுவதிலும் ஒரு பெரும் 'சத்தியாக்கிரகம்' நடத்துவோம் என்று, 'அகண்ட கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத்' எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

# மாநிலப் புது அமைப்புத் திட்டம்

## பொதுச்செயலாளர் அறிக்கை

"இந்தியத் துணைக்கண்டத்தின் மாநிலங்களைப் புதிய முறையில் திருத்தி அமைப்பதற்கான ஆலோசனையைக் கூறும்படி 1953-ஆம் ஆண்டில் இந்தியப் பேரரசினரால் நியமிக்கப்பட்ட பசில் அலிக் குழு இப்பொழுது தன் அறிக்கையை வெளியிட்டுள்ளது;

"புதிய மாநில அமைப்புகள் எப்படி இருக்க வேண்டும் என்று ஆங்காங்குள்ள மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களோ, அத்தகைய ஆவல்களை முழுவதும் நிறைவேற்றாத முறையிலும், பற்பல இடங்களில் முரண்பட்ட வகையிலும் பசில் அலிக் குழு தன்னுடைய கருத்துக்களைச் சிபாரிசு செய்துள்ளது;

"இந்தியாவிலுள்ள எல்லாப் பிரிவினரையும் திருப்திப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு, எவரையும் திருப்திப்படுத்தாத நிலையை குழுவின் அறிக்கை உண்டாக்கியிருக்கிறது;

"அறிக்கை எதிர்பார்த்த பலனை பயக்காத காரணத்தால், இந்தியத் துணைக் கண்டத்தின் ஆங்காங்குள்ள தலைவர்கள் தம் மறுப்பு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்; ஆங்காங்கு மறியல்கள், வேலை நிறுத்தங்கள், கடையடைப்புகள் போன்ற கிளர்ச்சிகள் வலுப்பெற்று வருகின்றன; தத்தம் கோரிக்கையை வலியுறுத்த ஆங்காங்குள்ள ஆண்களும் பெண்களும், இளைஞரும் முதியோரும், மாணவரும் அரசியல் கட்சியினரும் போராட்டங்களுக்கான ஆயத்தங்களைச் செய்துவருகின்றனர்; தென்னகத்தில் கொந்தளிப்புகள் எழுவதற்கான அறிகுறிகள் தென்படத் துவங்கிவிட்டன;

"மாநிலங்கள் புதிய முறையில் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்பதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதைப் புரிந்துகொண்டால், மாநிலப் புது அமைப்புக் குழு எந்த வகைகளில் தவறு செய்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். வெள்ளையர் ஆட்சியின் கீழ் மாநிலங்கள் இயற்கையாகவும், செயற்கையாகவும் கண்ட கண்டபடியெல்லாம் பிரிக்கப்பட்டுக் கிடந்ததால், இயற்கையான ஒருமைப்பாடுள்ள மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று எல்லோராலும் உணரப்பட்டது; பல்லாண்டு காலமாக அந்த உணர்வே எல்லோருக்கும் எல்லா அரசியல் கட்சியினராலும் ஊட்டப்பட்டு வந்தது. இந்த உணர்வு ஆளவந்துள்ள கட்சியாகிய காங்கிரசுக் கட்சியால் மிகவும் அழுத்தந் திருத்தமாக ஊட்டப்பட்டு வந்தது என்பதை எவரும் மறுக்க இயலாது. மாநிலங்கள் புதிதாகத் திருத்தி அமைக்கப்படுவதற்கு, 'இப்பொழுது மாநிலங்கள் மொழிவழி அமைந்திருக்கவில்லை; அவை மொழிவழி அமைக்கப்படவேண்டும்' என்பதுதான் நெடுநாளாக உணரப்பட்டு வந்த காரணமே ஒழிய, பொருளாதார வசதியோ, நிர்வாக வசதியோ, இயற்கை அமைப்போ, நில அமைப்போ அல்ல; இப்பொழுது இந்தியத் துணைக் கண்டம் எங்கணும் கொந்தளிப்புகள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், பசில் அலிக் குழு, நீண்ட காலமாக உணரப்பட்டு வந்த மொழிவழி மாநிலப் பிரிவினைக்கு முக்கியத்துவமும், முதலிடமும் கொடுக்காமல், வேறு பல காரணங்களுக்கும் முக்கியத்துவமும் முதலிடமும் கொடுத்து, அந்த வகையில் மாநிலங்களைப் பிரிக்க முயன்றிருப்பதுதான்;

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை மொழிவழி மாநிலப் பிரிவினைக்கு முதலிடம் கொடுப்பதும், திராவிடத்தின் முழு விடுதலையைக் குறிக்கோளாகக் கொள்ளுவதும் ஆகும்; இந்த அடிப்படையில் நின்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பசில் அலிக் குழுவின் அறிக்கையை நோக்குகிறது—ஆய்ந்து பார்க்கிறது;

"பசில் அலிக் குழு சென்னை வந்திருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அக்குழுவிடம் வைக்கப்பட்ட கருத்துக்களில் முக்கியமான சிலவற்றை இங்கே நினைவு படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்:—

"தற்போதைய அரசியல் அமைப்பு, பல நூற்றாண்டுகளாக மெல்ல மெல்ல, சில சமயங்களில் இயற்கையாகவும், வேறு சில சமயங்களில் செயற்கையாகவும் வளர்ந்ததின் விளைவு; அவை முழுவதும் இந்த நாட்டை அடிமைகொண்ட அந்நிய அரசுகளால் செய்யப்பட்டன; அவர்களின் செயல் நல்ல எண்ணத்துடனும் இருந்திருக்கலாம்—நச்சு எண்ணத்துடனும் இருந்திருக்கலாம்; ஆனால், இந்த மண்ணுக்கு உரியதல்ல என்பது மட்டும் திண்ணம்; ஓர் அந்நிய அரசு, சாதாரண இயல்புப்படியே, யார் மண்ணுக்கு உரியவர்களோ அவர்களின் எண்ணங்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வழிவகைகள் காணமுடியாது; எனவே, பலம் பொருந்திய–உறுதியான–திறமை மிக்க அரசாங்கத்தை நிறுவுவதே அவர்களின் ஒரே குறிக்கோளாய் விளங்கியிருக்கிறது;

"ஆகவேதான், பரந்த இந்தியத் துணைக் கண்டமானது, இன்றைய தினம், வலிந்து திணிக்கப்பட்ட பல நிர்வாகப் பகுதிகளின் தொகுப்பாகக் காட்சியளிக்கிறது; இந்த அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு அவர்களுக்கு ஆயுதமாக இருந்தது அறிவல்ல—அதிகாரக் கோலாகும்; இந்தத் தவற்றை எடுத்துக் காட்டிய பெருமை நிச்சயமாகக் காந்தியக் காங்கிரசையே சாரும்; வெறும் நிர்வாக மண்டலங்களுக்குப் பதிலாக, இயற்கையான — ஒருமைப்பாடுள்ள — தேசியப் பிரிவுகளுள்ள அரசுகள் நிறுவப்படவேண்டும் என்ற மொழிவழிப் பிரிவினைக் கொள்கையை மக்கள் மன்றத்தில் வைத்துத் திறமையுடனும், தெளிவாகவும் காங்கிரசு வாதாடியது; யார் மொழிவழி பிரிவினைக் கொள்கைக்காக வாதாடினார்களோ, அவர்கள் ஆளவந்தார்களாகிவிட்டனர்; ஆனால், மொழிவழிப் பிரிவினைக் கொள்கையைக் காங்கிரசுச் சர்க்காரே எதிர்க்கவும், கண்டிக்கவும் ஆன விசித்திரமான நிலை ஏற்பட்டுள்ளது; இன்றைய ஆளவந்தார், வெள்ளையரிடம் கற்ற வித்தையை வைத்துக்கொண்டு, 'ஏக இந்தியா,' 'இந்தியாவின் ஒருமைப்பாடு,' என்பன போன்ற தங்களுக்கு 'செல்லமான' கொள்கைகளை வற்புறுத்துகின்றனர்......'ஏக இந்தியா,' 'இந்தியாவின் ஒருமைப்பாடு' என்ற கொள்கைகளை எவ்வளவுதான் வற்புறுத்தினாலும், இந்தியத் துணைக் கண்டமானது பல்வேறு தேசியப் பிரிவுகளை—ஒன்றிற்கொன்று முரண்பாடில்லாவிட்டாலும், ஒன்றுடன் ஒன்று ஒரே வார்ப்பில் சேர்க்கப்பட விரும்பாத பல்வேறு தேசியப் பிரிவுகளைக் கொண்டது என்பதை எவரும் புறக்கணித்துவிட முடியாது;

"மொழிவழிப் பிரிவினை என்பது பல்லாயிரக் கணக்கானவர்கள் தத்தமது தாயகத்தைப் பெறவும், தங்களது அறிவால்—ஆற்றலால் அதைச் சீராக்கி செம்மைப்படுத்தவும் விரும்பும் இதய எழுச்சியாகும்; சுருங்கச் சொல்லின், இதுதான் தேசிய உணர்வாகும்; மொழிப்பற்று, இந்த உணர்வின் வெளிப்படை அம்சமாகும்; வெறும் நிர்வாகப் பிரிவுகள் மூலம் தரப்படும் இடம் தங்களது தேசிய உணர்வுக்கு அடிக்கப்படும் சாவு மணி என்பதே அவர்களின் முக்கியத்துவமாகும்; இந்த வாதத்தை, ஒற்றுமை—கட்டுப்பாடு என்ற பெயரால் சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது;

"மொழிவழி பிரிவினைக் கோரிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட மொழியின் பாதுகாப்புக்காக மட்டுமல்ல—ஆனால், ஒரு பொதுவான தாய்மொழியின் மூலம் உறவு கொண்ட ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தங்கள் இயற்கையான தேசிய அவாக்களை நிறைவேற்றிக்கொள்ள—ஒரே அரசியல் அமைப்பின் மூலம் சேர்ந்து வாழவேண்டும்—என்ற உண்மையை, இந்தக் குழு குறித்துக் கொள்ள வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் வேண்டுகிறது;

"மொழிவழிப் பிரிவினை, தனது நீண்ட பயணத்தின் முதற்படி—என்று, திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது; இந்தச் சந்தர்ப்பத்தில், திராவிடம், தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் என்ற நான்கு மொழிவழிப் பிரிவுகளை உடையது; ஆகவே, இந்த நான்கு மொழிவழிப் பிரிவுகளை அமைப்பதுதான் உடனடித் தேவை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறது; இதைச் செய்யும்போது, எந்த ஒரு மொழிப் பிரிவும், மற்றொரு மொழிப் பிரிவின் நிலப்பரப்பை அபகரித்துக் கொள்ளாதவாறு அதிகாரத்திலுள்ளோர் முழுக் கவனம் செலுத்தவேண்டும்;

"விசால ஆந்திரம், சம்யுக்த கர்நாடகம், ஐக்கிய கேரளம், தமிழகம்—என்ற பெயரால் உலவும் கோரிக்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் முழுமனதுடன் வரவேற்பதுடன், ஆதரவும் அளித்து வருகிறது;

"திராவிட முன்னேற்றக் கழகம், மொழிவழிப் பிரிவினை அமைப்பு அவசியம்—என்று கூறுவதுடன், 'இந்த நான்கு மொழிப் பகுதிகளிடையே வேறு எந்த மொழிப் பகுதிகளும் பாராட்ட முடியாத ஓர் உறவுமுறை இருந்து வருகிறது' என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறது; ஏனெனில், தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகியவை ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை; இந்த மொழிகள் பேசும் மக்களிடம் ஒரு உறவுமுறை உள்ளது; இந்த உறவு ஆயிரங் காரணங்களால் உலர்ந்திருக்கலாம்; ஒற்றுமைக்கும்—தோழமைக்கும் அடிப்படையான உயிர்ச் சக்தியாக அந்த உறவு விளங்குகிறது.........சுய நிர்ணய அடிப்படையில், இந்த நான்கு மொழி வழி அரசுகளின் கூட்டாட்சியே திராவிட நாடாகும்; இந்தக் கூட்டாட்சி சுதந்திரக் குடியரசு நாடாக விளங்கும்; ஆகவே, இந்த நாட்டு மக்கள், அரசியல் — பொருளாதார — கலாச்சாரத் துறைகளில் முழு வளர்ச்சிபெற வாய்ப்புப் பெறுவர்;

"ஒரு நாடு இன்பமாகவும், வளமாகவும், முன்னேற்றமுள்ளதாகவும் இருக்க ஒருமைப்பாடு தேவை; இந்த ஒருமைப்பாடு, மொழி—இனம்—வரலாறு ஆகியவைகளால் உண்டாக்கப்படுகிறது; அந்த நாடு பொருளாதார நிறைவு பெற்றதாக இருப்பதற்கு, அது, பரந்துள்ள நிலப்பரப்பு, தொடர்புடையதாய் இருக்கவேண்டும்; மேலே குறிப்பிட்ட எந்தக் காரணத்தை வைத்துப் பார்த்தாலும், அல்லது எல்லாக் காரணங்களையும் வைத்துப் பார்த்தாலும்—திராவிட நாடு சுதந்திர ஜனநாயகக் குடியரசாக விளங்குவதற்கு உரிமையுடையது—என்பது புலப்படும்.

"இத்தகைய கருத்துக்களின் அடிப்படையில் நின்றுதான், திராவிட முன்னேற்றக் கழகம், இப்பொழுதும் தன்னுடைய கொள்கையை வற்புறுத்துகிறது;

"பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில்—குறிப்பாகத் தென்னகத்தைப் பொறுத்தவரையில், மாநில அமைப்புக்கு மொழிவழி அமைப்பைத்தான் முக்கியமாகக் கருத வேண்டும்; பொருளாதார வசதி, நில அமைப்பு, வரலாற்றுத் தொடர்ச்சி, நிர்வாக வசதி போன்ற காரணங்கள் நாட்டின் அமைப்புக்குத்தான் பார்க்கப்பட வேண்டுமே ஒழிய, ஒரு நாட்டின் உள்ளடங்கிய மாநில அமைப்புகளுக்கு அத்தகைய காரணங்களல்ல முக்கியமாகக் கருதப்பட வேண்டியது; நமது நாட்டைப் பொறுத்தவரையில், மொழிதான் மாநில அமைப்புக்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறது என்பதை உணரவேண்டும்;

"பசில் குழுவின் அறிக்கைப்படி, புதிய தமிழகத்தில் தமிழ் பேசும் பகுதிகள் முழுவதும் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. திரு-கொச்சி அரசிலுள்ள ஒன்பது தமிழ்த் தாலுகாக்களில் ஐந்தைத்தான் புதிய தமிழகத்தோடு சேர்க்கக் குழு சிபாரிசு செய்திருக்கிறது—அவை, அகத்தீசுவரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை ஆகும்; தேவிகுளம்,

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17–10–'55 திங்கள்

# நோயற்ற வாழ்வு!

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று பழமொழி உண்டு. வாழவே வழியின்றித் தவிக்கும் மக்கள் எங்ஙனம் நோயின்றி வாழ முடியும்? மக்கள் எல்லோருக்கும் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளையே பெற்றுத் தர இயலாத இன்றைய காங்கிரஸ் அரசாங்கம், மக்களை, நோய் நொடிகளின் தாக்குதலிலிருந்து காப்பாற்றும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

'நோய்களைக் குணப்படுத்த வகை செய்வது மட்டும் போதாது; நோய்களே வராமலிருக்கக் கூடியவரை முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்; இதற்கு, மக்களின் ஆரோக்கியத்தை — வாழ்க்கைச் சூழ்நிலையை விசேடமாக அபிவிருத்தி செய்யவேண்டும்,' என்று, மாநில சுகாதார அதிகாரிகள் மாநாட்டில் சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

'என்ன செய்ய வேண்டும்?' என்பதைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார் மந்திரி; ஆனால், அதனை எந்த அளவு கடந்த காலத்தில் காங்கிரஸ் ஆட்சியினர் செய்திருக்கின்றனர்— என்பதை அவர் சொல்லவில்லை; அவர் மந்திரி!

'சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை எத்தனைகுறைவாயிருக்கிறதோ, அதைப் பொறுத்து, அந்த மருத்துவமனையில் உள்ள வைத்தியர்களுக்குச் சம்பள உயர்வு இருக்கும்,' என்ற ஒரு நடைமுறை, ஜப்பான் நாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுவதுண்டு; ஆனால், இங்கோ, நடைமுறை வேறு; நேர் எதிரானது!

சர்க்கார், ஒவ்வொரு ஆண்டும், தாங்கள் எத்தனை புதிய மருத்துவ மனைகளைத் திறந்தனர் —வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினர்— என்று கணக்குக் காட்டி, 'இத்தனை மருத்துவ வசதிகளை அரசாங்கம் செய்திருக்கிறது,' என்று கூறுவதில் பெருமை இருப்பதாக நினைக்கின்றனர். உண்மையில், மருத்துவமனைகள், ஊர்தோறும்—கிராமந்தோறும் இடம் பெற வேண்டுவதும்,நோயுற்றோருக்கு குணம் தர வழிசெய்ய வேண்டும் என்பதும் தவறுடையன அல்ல; ஆனால், மருத்துவ மனைகள் வளருகிற வேகத்தைக் காட்டிலும் நோயாளிகளின் எண்ணிக்கை வளருவது, ஒரு அரசாங்கத்திற்குப் பெருமை தேடித் தரத்தக்கதல்ல!

மக்கள் நோய்வாய்ப்பட்டு அவதியுறுவதற்கு அவர்களை அரித்துத் தின்னும் வறுமையும், அறியாமையும்தான் முக்கியமான காரணங்களாகக் கூறப்பட முடியும்.

முறையான உடல் வளர்ச்சிக்கு—நாள்தோறும் உழைப்பினால் செலவிடும் சக்தியைத் திரும்பப் பெறவும், மேலும் வளர வழி செய்வதுமான சத்துள்ள உணவு, சமநிலை உணவு இன்றியமையாததாகும்; 'எது சமநிலை உணவு' என்பதை விளக்க, இந்தியப் பேரரசினர் படம் தயாரித்து வெளியிடுகின்றனர்.

'முட்டையிலும், பாலிலும் எல்லா வைட்டமின் சத்துக்களும் உண்டு; பருப்பு வகைகளில் புரதச் சத்திருக்கிறது; கீரையிலும் — காய் கறிகளிலும் இரும்புச் சத்தும், சுண்ணாம்புச் சத்தும் இருக்கின்றன; மாமிசம், நெய், வெண்ணெய் இவற்றில் கொழுப்புச் சத்து மிகுதி; அரிசி, கோதுமை இவற்றில் மாவுச் சத்து இருக்கிறது,' என்று, விளக்கம் தரப்படுகிறது—படத்தில்!

ஆனால், இந்தச் சமநிலை உணவைப் பெறக்கூடிய வகையில், நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையோரின் வாழ்க்கை அமையவில்லையே!

பகல் பட்டினி—இராப் பட்டினி, கால் வயிறு — அரை வயிறு, அதுவும்—'இது எஜமான் வீட்டில் எஞ்சியது,' 'இது, நேற்றுக் காய்ச்சியக் கஞ்சியில் மிஞ்சியது,'—என்ற நிலையில்தான் வாழ்வை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர்.

வயிறார உண்ணப் போதுமான உணவு மக்களுக்குக் கிடைக்கவில்லை; அதைப் பெறுவதற்குப் போதுமான வருமானம் இல்லை; பலருக்கு வேலையே இல்லை; வருமானம் எங்கிருந்து வரும்? இந்த நிலையில் உள்ள மக்களுக்கு, 'சமநிலை உணவு எது' என்று விளக்குவதற்குப் படம் தயாரித்துக் காட்டுகின்றனர்.

இந்த நிலையில் உள்ள மக்கள் நோய் நொடிகளுக்கு இரையாவதில் ஆச்சரியம் ஏதுமில்லையே!

ஆரோக்கியமற்ற வாழ்வு பெற்றுள்ள மக்களை நோய்க் கிருமிகள் சுலபத்தில் வென்றுவிடுகின்றன.

மேலும், நோய் பரவுவதற்கு, மக்களின் அறியாமையும் வழி அமைத்துத் தருகிறது.

'வீதியிலே எச்சில் துப்பக் கூடாது; வீட்டின் முன் குப்பையைக் கொட்டக்கூடாது' —'ஏன்?'—என்பதை உணருவதற்கான நல்லறிவு, பெரும்பான்மை மக்களுக்கு இல்லை.

'எச்சில் உமிழ்வதும் குப்பை கொட்டுவதும் நோய்களைப் பரப்புவதாகும்' என்ற அறிவு, அவர்களுக்கு இல்லை; ஊர் உணர்வு பெற்றவர்களாக மக்கள் இல்லை.

மக்களின் வறுமையும், அறியாமையும்தான் அவர்களைக் கொன்று குவிக்கும் கொடிய நோய்களுக்கு மூலகாரணம் என்பதை உணர்ந்தால், நோய் வாய்ப்பட்ட பின் மக்களுக்கு இசமான—பலன் உள்ள உயர்தர சிகிச்சை தந்தால் மட்டும் போதாது; பொதுவாக அவர்களுக்கு, நோய் வராமலேயே தடுக்கவேண்டும் என்பதையும் உணர முடியும்; இதனை உணர்ந்தவராகவே தன்னைக் காட்டிக் கொண்டிருக்கிறார், சுகாதார மந்திரி!

ஆனால், நோய் பற்றுவதற்குரிய மூல காரணங்களை அறிந்துகொண்டிருக்கிற அவர், வறுமையையும், அறியாமையையும் ஒழிப்பதற்கு, எட்டாண்டுக் காலமாக ஒரு ஆட்சியினால் ஏன் முடியாமலிருக்கிறது என்பதையும் அறிந்திருக்க வேண்டும்; ஆனால், அவர், அது பற்றி ஏதுமே தெரிவிக்கவில்லை. எப்படித் தெரிவிப்பார்— அவர்தான் மந்திரியாயிற்றே!

நோயற்ற வாழ்வு என்று கிடைக்கவிருக்கிறதோ மக்களுக்கு?

## 'புன்சிரிப்புகள் மட்டும் பலனைத் தரமாட்டா'

இரங்கூன், அக். 14—

"அடுத்து ஜினீவாவில் நடைபெறவிருக்கிற நான்கு வல்லரசு வெளிவிவகார இலாகா மந்திரிகளின் மாநாட்டில் திட்டமான முடிவுகள் பல மேற்கொள்ளப் படக்கூடும் அந்த முடிவுகள் ஒரே கூட்டத்தில் ஏற்பட்டுவிட முடியாது; 'புன்சிரிப்பு'கள் மட்டும் பலன்களைத் தந்துவிட முடியாது,"

என்று, ஆஸ்திரேலியா வெளி விவகார இலாகா மந்திரி ஆர். ஜி. கேசி தெரிவித்திருக்கிறார்.

# பம்பாய்தான் ஏற்ற இடமாம்!

## 'டெலிவிஷன்' முறை முதன் முதலாக அங்குதான் ஏற்படக் கூடுமாம்!

ரூ. 50,00,000 செலவில் 'டெலிவிஷன்' நிலையமாம்!

இந்தியாவில் 'டெலிவிஷன்' வசதியைப் பெறவிருக்கும் முதல் நகரம் பம்பாய்தான; இந்தியாவில் 'டெலிவிஷன்' ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டதாம்!

ஒரு சிறு 'டெலிவிஷன்' நிலையத்தை ஏற்படுத்துவதற்கு சுமார் ரூ 50,00,000 செலவாகும் என்று தெரிகிறது.

இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்ட இறுதி காலத்தில்தான் இந்தியாவில் 'டெலிவிஷன்' ஏற்படலாம்; பூர்வாங்க ஏற்பாடுகள் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது.

இந்தியாவில், 'டெலிவிஷன்' வேலையை மேற்கொள்ளக்கூடிய பயிற்சிபெற்ற 'டெக்னீஷியன்'கள் இப்போது எவரும் கிடையாது; அயல்நாட்டினர் உதவி-முக்கியமாக அமெரிக்க நிபுணர்களின் உதவி இதற்காகக் கோரப்படலாம்.

சிலகாலத்திற்கு முன்னர், அகில இந்திய வானொலி நிலையம், தன் நிபுணர் ஒருவரை 'டெலிவிஷன்' பயிற்சி பெற்றுவருவதற்காக அமெரிக்காவுக்கு அனுப்பியது.

இந்தியாவில் 'டெலிவிஷன்' அமைப்பதற்கான ஏற்ற இடம் பம்பாய் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டு வசதி

ரூ. 10 கோடி திட்டம்

ராஜ்கோட், அக். 13—

நகரசுத்தித் தொழிலாளர்கள், மற்றும் இதர தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடியிருப்பு வீடுகள் அமைத்துத் தருவதற்கென ரூ. 10 கோடி பெறுமான திட்டம் ஒன்றை தயாரித்து மத்திய சர்க்காரிடம் தாக்கல் செய்திருப்பதாக பின்தள்ளப்பட்ட வகுப்பு 'கமிஷனர்' ஸ்ரீகாந்த் தகவல் தந்திருக்கிறார்.

திட்டப்படி, உத்தேசிக்கப்பட்டுள்ள தொகையில் பாதி கடனாகவும், பாதி மானியமாகவும் தரப்படும் என்றும், மூன்றாண்டுகளில் திட்டம் நிறைவேற்றப்படும் என்றும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

# மராட்டிய சாம்ராஜ்யம் கண்ட மாவீரன்சிவாஜிக்கு நினைவுச்சின்னம்

மராட்டிய சாம்ராஜ்யத்தை நிறுவிய மாவீரன் சிவாஜிக்கு நினைவுச்சின்னம் எழுப்பும் வகையில், 25 அடி உயரத்தில் செம்புச்சிலை ஒன்று வடித்து, பிரதாப் சாத் கோட்டை அருகே அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம். இப்போது காலத்தால் அழிந்து பட்டுக்கிடக்கும் சிவாஜியின் அரண்மனை இருந்த இடத்தில் 15 அடி உயரத்தில் சலவைத் தளம் அமைத்து, அதன்மேல் இந்தப் பெரும் சிலையை நாட்டப் போகின்றனராம்!

இதுவரையில் இதற்காக ரூ. 70,000 வசூலாகியிருப்பதாகவும், மொத்தம் ரூ. 1,50,000 வசூலிக்க உத்தசிக்கப்பட்டிருப்பதாயும், சிலைக்காக மட்டும் ரூ. 60,000 வரை செலவிடத் திட்டமிருப்பதாயும் தெரிய வருகிறது.

## வெள்ளத்திற்கு என்ன காரணம்?

பருவ நிலைமையைப் பாதிக்கும் பரிசோதனைகள் நிறுத்தப்படும்?

இலட்சுமணபுரி—

"பஞ்சாப் முதல் மேற்கு வங்கம் வரையிலுள்ள வட இந்தியப் பகுதிகளில் அளவுக்கு மீறிய வெள்ளம் ஏற்பட்டதற்கு—சிலர் தெரிவித்துள்ளவாறு — நீர்வளிக் குண்டு சோதனைகள் செய்வது காரணமா என்பதை,விஞ்ஞானிகள் ஆராய்ந்தறிய வேண்டியது அவசியமாகும்,"

என்று, வெள்ளம்பற்றி நடைபெற்ற விவாதமொன்றில், உத்திரப் பிரதேச செய்தி, நீர்ப்பாசன அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

'நீர்வளிக் குண்டு பரிசோதனைகள், பருவ நிலையைப் பாதிப்பதால், இதுபோன்ற சோதனைகளை தடைசெய்யவேண்டியது அவசியமாகும்' என அதே விவாதத்தில், காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

★

## தானியமின்றி பயிர்கள் விளைகின்றனவாம்!

அணு பரீட்சை காரணமா?

தென் ஆஸ்திரேலியாவின் கோதுமை வளமுள்ள பிரதேசத்தில் விளையும் பயிர்கள், தானியமின்றியே விளைகின்றனவாம்! இரு ஆண்டுகட்கு முன்பு நடைபெற்ற அணு ஆயுதச் சோதனையைத் தொடர்ந்து விழுந்த அணுத்துகள்களே இதற்குக் காரணமாக இருக்கக்கூடுமெனக் கருதுகின்றனர்.

'30 ஆண்டு கால அனுபவத்தில் இதுபோன்ற நிலை ஏற்பட்டதே இல்லை; பனித் திவலைகளுடன் அணுத் துகள்களும் சேர்ந்து விழுந்திருக்கக் கூடுமென நினைக்கிறேன்,' என்று, விவசாயி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஊனமில்லாத பிச்சைக்காரர்கள்

அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுத்தப்படுவர்

லக்னோ, அக் 15—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் உள்ள அபிவிருத்தித் திட்டங்களில், ஊனமில்லாத உடல் நலமுள்ள பிச்சைக்காரர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும், அதற்கான திட்டம் ஒன்று உத்தேசிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் திட்டம், இக்கு, அக்டோபர் 16-ந் தேதியன்று காங்கிரஸ் தலைவர் யு என். தேபரால் துவக்கி வைக்கப்படவிருக்கும் சமூக சேவகர்களின் மாநாடு ஒன்றில் விவாதிக்கப்படவிருக்கிறதாம்.

## '500 கோடி கெஜத்திற்கு மேல் உற்பத்தி கூடாது'

மில்களுக்குத் தடை விதிக்கக் கோரிக்கை

ஆமதாபாத்,—

'500 கோடி கெஜத்திற்கு மேல் மில்களை துணி உற்பத்தி செய்வதற்கு விடுதல் கூடாது,' என்று, அ. இ. காதி,கிராமக் கைத்தொழில் கழகம், இந்திய சர்க்காரையும் — திட்டக்குழுவையும் கோரியுள்ளது

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கதிர்களின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்துமாறு கழகம் கேட்டுக்கொண்டுள்ளது

இந்தத் திட்டக் காலத்தில் தேவைப்படும் அதிகப்படியான துணித் தேவையை பூர்த்தி செய்வதற்கு, கைத்தறி துணித் தொழிலுக்குத் தேவையாக உள்ள நூலை விநியோகம் செய்வதற்கு, 'அம்பர் சர்க்கா'வை பெரும் அளவில் அமுலுக்குக் கொண்டுவருவதென முடிவு செய்தது.

## மணிக்கு 2000 மைல் செல்லும்பறக்குந்தட்டு

இந்தியாவில் பிற்பகல் உணவு பிரிட்டனில் இரவு உணவு

மணிக்கு 2,000 மைல்கள் செல்லும் அணுசக்தியினால் இயங்கும் பறக்கும் தட்டுகள் இன்னும் கொஞ்ச காலத்தில் ஏற்படுமென்றும், பிரிட்டன பிரயாணிகள் பிற்பகல் உணவை இந்தியாவில் சாப்பிட்டு, பிறகு மாலையில் பிரிட்டனுக்குத் திரும்பி இரவு உணவு சாப்பிடுவதற்கு சாத்தியமாகக் கூடுமென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

## அர்ஜெண்டைனாவின் முன்னாள் தலைவர்

விட்டிலேயே காவல் வைக்கப்படுவாராம்!

"அர்ஜெண்டைனாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் பெரான், அர்ஜெண்டைனாவின் தற்காலிக சர்க்காரின் வேண்டுகோளுக்கு இணங்க, வீட்டிலேயே காவல் வைக்கப்படுவார்"

என்று பராகுவே வெளிவிவகார இலாகா மந்திரி தெரிவித்திருக்கிறார்.

'முன்பே அவரைக் காவலில் வைக்காததற்குக் காரணம், தகுந்த வீடு ஒன்று முன்னமேயே கிடைக்காததுதான்' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## இந்தியா வருவதற்கு ட்ரூமன் விருப்பம்

ஐ நா. அக் 14—

அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவரான ஹாரி ட்ரூமன் இந்தியா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்ய விருப்பம் தெரிவித்திருக்கிறாராம்

'இந்தியாவிலிருந்து அழைப்பு வந்துள்ளதா?' என்று பத்திரிகையாளர் கேட்டபோது 'நான் இப்போதுள்ள நிலையில் அழைப்பை எதிர்பார்க்கத் தேவையில்லை; வேறு எல்லா அமெரிக்கர்களும் போய்வருவதைப் போன்றே நானும் போய்வர விரும்புகிறேன்,' என்று அவர் தெரிவித்தாராம்.

# ‘தேவிகுளம், பீர்மேடு ஆகியவை தமிழகத்தைச் சேர்ந்தவையே’

## தி. த. நா. காங்கிரஸ் தலைவர் நேசமணி விளக்கம்

நாகர்கோவில், அக். 15—

“மாநில புனரமைப்புக் குழு அண்மையில் வெளியிட்டிருந்த சிபாரிசுகளில், திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகளில் 5 தாலுகாக்களை மட்டும் சென்னை மாநிலத்துடன் இணைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்ததானது, திரு. த. நா. காங்கிரசிற்குப் பெருத்த ஏமாற்றத்தை அளிப்பதுடன், அது, திரு. தமிழ் நாட்டு மக்களின் ஒருமித்த கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களது விருப்பத்தை நிறைவேற்றுவதாக இருக்கவில்லை,” என்று, ஏற்கனவே, திரு. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரான திரு. ஏ. நேசமணி எம். பி., அவர்கள் அறிவித்துள்ளார்.

மாநில புனரமைப்புக் குழுவின் இச்சிபாரிசு எந்தவகையில் தி. த. நா. கா.-வினருக்கும், திரு—தமிழருக்கும் ஏமாற்றத்தை உண்டுபண்ணியுள்ளது என்பதை விவரித்து அவர் ஒரு அறிக்கையும் விடுத்துள்ளார். அவ்வறிக்கையில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

“தேவிகுளம்—பீர்மேடு சட்டசபைத் தொகுதியைக் கேரள மாநிலத்திற்கு விட்டுக்கொடுத்திருப்பதானது, இந்தியாவின் இதர பாகங்களுக்காகக் குழு மேற்கொண்ட தத்துவங்களுக்கு நேர் விரோதமானதாகும்; இந்தத் தொகுதியில் இருக்கும் மொத்தம் 1,53,043 மக்கள் தொகையில், தமிழர்களின் எண்ணிக்கை 1,05,313 ஆகும்; ‘தேவிகுளத்தில் 72 சதவிகிதம் தமிழர்கள் உண்டு,’ என்பதை, குழுவே ஒப்புக்கொண்டிருக்கிறது; இந்தப் பிரதேசத்தில், 63 063 பட்டிகை இனத்தவரும், 3,469 பட்டிகை மலைப் பிரதேச இனத்தவரும் இருக்கின்றனர்; இவர்களின் வளர்ச்சிக்காக இந்திய சர்க்கார் அளித்திருக்கும் எல்லா வசதிகளும், அவகாசங்களும் இவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றன; தொடர்ந்து வந்துகொண்டிருந்த எல்லா சர்க்கார்களும், இவர்களை ஒடுக்குவதையே கொள்கையாகக் கொண்டிருந்தனர்.

குழு, இங்கு வருகை தந்துவிட்டுத் திரும்பிய பின்னர், 20 பெண்கள் உள்பட 434 நபர்கள் மீது நன்னடக்கை ஜாமீன் வழக்குகள் தொடர்ந்திருப்பதும், 50-க்கு மேலான வழக்குகள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருப்பதும். அந்த அடக்குமுறைக்கு அத்தாட்சியாகும். அங்கு அமுல் நடத்தப்படுவதாகக் கூறப்படும் குடியேற்றத் திட்டம், பொதுப் பணத்தை விரயம் செய்வதாகும்; தமிழ் பெரும்பான்மையோரை சிறுபான்மையோராக்கச் செய்யப்படும் ஒரு சூழ்ச்சியே இது!

“அங்கிருக்கும் ஏலத் தோட்டங்கள், சென்னைவாசிகளுக்கு சொந்தமாக இருப்பது; பெரியாறு தண்ணீர், அந்நாட்டின் ஆறு பகுதிகளிலுமிருக்கும் 100 சதவிகிதம் தமிழர்கள், போன்ற முக்கிய பிரச்சினைகளை கருத்தில் எடுக்கவே இல்லை. இதர மாநிலங்களின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை பொறுத்தவரையில் குழு காட்டிய அக்கரை, சென்னை மாநிலத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாகக் காட்டப்படவில்லை. துங்கபத்திரா திட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் பெல்லாரி மாவட்டத்துக்குக் காண்பித்த சலுகை, பெரியாறு திட்டம் சம்பந்தமாக சென்னைக்குக் காண்பிக்கப்படவில்லை சென்ற தேர்தலில் அந்த பிரதேச மக்கள் பிரகடனப்படுத்தியிருந்ததை குழு புறக்கணித்துவிட்டது.

### நெய்யாற்றங்கரை

“நெய்யாற்றங்கரை தாலுகாவைப் பொருத்தவரை 1951-ம் வருடத்து மக்கள் தொகைக் கணக்கை நாங்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. அப்பொழுது, ‘மக்கள் தொகை கணக்கெடுப்பதில் ஈடுபட்டிருந்தவர்கள் சரியான கணக்கெடுக்கிறார்களா என்று கவனித்துக்கொள்ள வேண்டும்’ என்ற பிரச்சாரம் செய்ததற்காக, எங்கள்மீது வழக்குத் தொடரப்பட்டதை நாங்கள் இதற்கு ஆதாரமாகக் காட்டினோம். இந்த தாலுகா உட்பட பாறச்சாலை தொகுதி மக்கள், தேர்தலில் தி த. நா. கா. அபேட்சகரை வெற்றி பெறச் செய்ததின் மூலம் சென்னையுடன் இணையவேண்டுமென்ற தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தத் தாலுகாவில் எந்தக் கட்சியும் சொந்தமாக ஒரு பஞ்சாயத்தேனும் அமைக்கவில்லை; ஆனால் நெய்யாற்றின் இரு கரையிலுமாக தி. த. நா. கா. சொந்தமாக ஐந்து பஞ்சாயத்துக்களை அமைத்துள்ளது; விளவங்கோடு தாலுகாவின் அபிவிருத்திக்கென ஆரம்பிக்கப்பட்ட நெய்யாறு அணையின் மேலதிகாரம் பற்றி குழு எதுவுமே கூறவில்லை. இந்த உண்மைகள் எதையுமே சுட்டிக்காட்டாமல், இந்த பிரதேசத் தமிழர்களின் உரிமையை குழு புறக்கணித்துவிட்டு நெய்யாற்றங்கரைதாலுகாவை கேரளத்திற்கு ‘தானம்’ கொடுத்திருக்கிறது. அதற்கு சர்க்கார் தரப்பிலிருந்து அளிக்கப்பட்ட ஆதாரமற்ற கணக்குகளை அவர்கள் கையாண்டிருக்கின்றனர்.

“சித்தூரில் மலையாளிகள் பெரும்பான்மையோராக இருக்கின்றனர்’ என்று, மக்கள் தொகை கணக்குப் பயன்படுத்தின துண்டுகளை ஆதாரமாகக்கொண்டு கண்டுபிடித்திருப்பது அதிசயமாகவே இருக்கிறது.

‘தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய இடங்களை சென்னையுடன் இணைக்க கிளர்ச்சி நடத்தவேண்டுமென பல நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. இந்த வகையில் தி. த. நா காங்கிரஸ் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இது விஷயமாக தேசிய காங்கிரஸ் தலைவருக்கும் மகஜர் சமர்ப்பித்து, காங்கிரஸ் செயற்குழுவில் பரிசீலிக்கவேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். சட்ட பூர்வமான எல்லா நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம். அதில் சரியான முடிவு கிடைக்கவில்லையானால், சென்னையில் இருக்கும் எல்லா பிரிவினருடனும் கலந்தாலோசித்து நல்லதொரு முறையில் நடவடிக்கையை தமிழ் நாடு காங்கிரஸ் மேற்கொள்ளும். இந்த விஷயத்தில் தி. த. நா. கா. ஒருநாளும் தூங்கிக்கொண்டு இராது.”

# நேருவின் ஆச்சரியம்!

புதுடில்லி அக். 14—

கோவாவிற்கு, பாகிஸ்தான் அவாமி லீக் தலைவர் சுராவர்த்தி சென்று வந்தது தனக்கு ஆச்சரியத்தை மூட்டியதாக பிரதமர் நேரு காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்தாராம்

கராச்சி கைத்தொழில் கண்காட்சியில் உள்ள இந்திய நிலையத்தின்முன், பாகிஸ்தானியர் சிலர் மறியல் செய்வதையும், கற்களால் தாக்கியதையும் குறிப்பிட்ட பண்டிதர், ‘பாகிஸ்தானியரின் இந்த நடவடிக்கைகள், இரு நாடுகளிடையேயும் உள்ள நட்புறவு, நல்லெண்ணம் இவற்றை வளர்ப்பதற்கு மாறாகக் குறைக்கும்’ என்று கருத்து தறிவித்திருக்கிறார்.

### அமெரிக்காவின் மக்கள் தொகை

கடந்த செப்டம்பர் திங்களில் அமெரிக்காவின் மக்கள் தொகை 16,57,62,000 ஆக உயர்ந்துள்ளது என்றும், 1954 செப்டம்பர் திங்களில் இருந்ததைவிட இப்பொழுது 28 இலட்சம் அதிகரித்துள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அயல் நாடுகளிலுள்ள அமெரிக்க இராணுவத்தினரின் எண்ணிக்கையும் இதில் உட்படும்; 1950 ஏப்ரல் மாதத்தில் எடுத்த மக்கள் தொகை எண்ணிக்கையைவிட இது 146 இலட்சம் அதிகமாகும்.

---

ஐ நா. பந்தோபஸ்து கவுன்சிலுக்கு, வருகிற ஜனவரியிலிருந்து இரண்டு ஆண்டு கால உறுப்பினர் பதவிக்கு ஆஸ்திரேலியாவும், கியூபாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

# ‘ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும்’

## டாக்டர் இராதாகிருஷ்ணனும் கூறுகிறார்

பரோடா, அக். 13—

“தொழிலாளர்களானாலும், குழந்தைகள், மாணவர்களானாலும் கட்டாயப்படுத்தி கீழ்ப்படியவைக்கும் முறை கூடாது; பலாத்காரத்துக்குப் பதிலாக அன்பாகப் பேசியும், ஆதரவோடு பிரச்சினையை புரிந்துகொண்டு பரிகாரம் தேடுவதும்தான் சாத்வீக முறை; இதர வாழ்க்கைத் துறைகளைப்போன்று, சர்வதேச விவகாரங்களிலும், சாத்வீக முறை படிப்படியாக ஏற்றுக் கொள்ளும் நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது;

“கல்வித்துறையில் மேற்பார்வையிடும் முறையை மேலும் திறமையானதாகச் செய்ய வேண்டும்; ஆசிரியர்கள் எல்லோருக்கும்—குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் தரப்பட வேண்டும்,”

—என்று, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், பிரதேச தலைமை ஆசிரியர்கள் அரங்கில், தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் சொன்னார் :—

“மேலிருந்து கீழ்வரையில் உபாத்திமைத் தொழில் நடத்தும் எல்லோருடைய சம்பளத்தையும் மாற்றியமைக்க வேண்டும்; சம்பளத்தை மாற்றினால் மட்டும் போதாது; ‘ஆசிரியர்களாக சேவை புரிவது புனிதமானதென்றும், தாங்களே மாணவர்களை திறமைசாலிகளாக்கப்பட வேண்டியவர்களென்றும் கருதுகிறவர்களையே உபாத்தியாயர்களாக நியமிக்க வேண்டும்.”

மாணவர்களைப் பயிற்றுவிப்பதில் ஜனநாயக முறையைப் பின்பற்ற வேண்டுமென அவர் ஆசிரியர்களைக் கேட்டுக்கொண்டார்.

அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஜனநாயகம் வெறும் அரசியல் ஏற்பாடு மட்டும் அல்லவென்றும், ஆனால், அது ஒழுக்கத்தில் நம்பிக்கை காட்டுவதென்றும் சொன்னார்.

சிறுவர்களை அடக்கி வைத்து, அவர்களை எல்லா வகையிலும் கட்டுப்படுத்த வேண்டுமென்று கூறுவதும், அல்லது குழந்தைகளை அவர்கள் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டுமென்று கூறுவதும் இரு தீவிர வழிகளென்றும், ஆனால், சிந்தித்து முடிவு செய்யும் வேலையை குழந்தைகளுக்கே விட வேண்டுமென்றும் அவர் கூறினார்.

இடைநிலைக் கல்வி முறை பற்றி அவர் பேசுகையில், உலகத்தில் மாணவர்களுக்கு ஒருவித நம்பிக்கை ஏற்படும்படி ஆசிரியர்கள் செய்ய வேண்டுமென்றும், ‘மேல் தளத்’தில் தகராறுகள் இருந்த போதிலும், உலக நிபுதிகளின் ‘அடித்தளத்’தில் அமைதி நிலவுகிறதென்பதை அவர்கள் உணரும்படி செய்யவேண்டுமென்றும் கூறினார்.

“கல்லூரி ஆசிரியர்கள் சிந்தித்து செயலாற்றுகிறவர்களாக இருந்தால்தான் மதிக்கப்படுவார்கள்; ஆசிரியர்கள் அரசியலில் கலக்காமல் இருந்தால்தான் மாணவர்களிடையே தகராறும், சண்டைகளும் இருக்காது,” என்றும் அவர் கூறியுள்ளார்.

# சென்னை ஆரம்பக் கல்விக் குழு சிபாரிசுகள் : மேலும் சில குறிப்புகள்

★

சென்னை ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் குழு, சென்னை சர்க்காரால், 1954 நவம்பரில் நியமிக்கப்பட்டது.

‘அரசியலமைப்பு அமுலுக்கு வந்த தேதியிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் 14 வயது வரையில் எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமாக இலவசமாகக் கல்வி போதிக்க வேண்டும்’ என்று அரசியல் அமைப்பு சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு என்ன செய்யலாம் என்று வழிகள் கூறுவதற்காகவும், இப்போது உள்ள ஆரம்பக் கல்வி முறையைப் பரிசீலனை செய்யவும் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் செய்துள்ளதாகக் கூறப்படும் சிபாரிசுகள் சில, முந்திய இதழில் தரப்பட்டுள்ளன; மேலும் கிடைத்துள்ளதாகக் கூறப்படும் சிபாரிசுகளும் இங்கு தரப்பட்டுள்ளன :—

### தீவிர மாறுதல்களை விரும்பவில்லை!

“ஆதாரக் கல்வி முறை ஏற்படுத்துவது பற்றி திடீரென்று, தீவிரமான மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று குழு விரும்பவில்லை. இது சம்பந்தமாக இப்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளே திருப்திகரமானவைகளாயிருக்கின்றனவென்று குழு கருதுவதாகத் தெரிகிறது.

### பிரிட்டன் உதாரணம்!

ஆரம்பக் கல்வி பற்றிய பிரச்சினைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று குழு கருதுகிறது. பிரிட்டனில், கல்விக்காக வருடத்தில் 40 கோடி பவுன் செலவிடப்படுகிறது; இதில், வாரத்திற்கு பத்து இலட்சம் பவுன் பள்ளிக்கூட கட்டிடங்களுக்காகச் செலவிடப்படுகிறது. 1945 ஏப்ரல் மாதத்திலிருந்து இதுவரையில் 2,000 பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

### வெற்றி பெறவில்லை!

கட்டாய ஆரம்பக் கல்வி பொதுவாக வெற்றி பெறவில்லையென்பதே குழுவின் தீர்ப்பு. 6 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி போதிப்பது 21 நகர சபைகளிலும், நகர சபைகள் இல்லாத 230 நகரப் பிரதேசங்களிலும், 681 கிராமப் பிரதேசங்களிலும் சென்ற பத்து ஆண்டுகளாக அமுலில் இருந்து வந்திருக்கிறது.

### ஆராய்ச்சிப் பிரிவு ஏற்படுத்துக!

பாடப் புத்தகங்கள் தயாரிப்பது சம்பந்தமாக, கல்வி இலாகாவுக்கு வேண்டிய யோசனைகள் கூறுவதற்காக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் ஒன்றில், ஒரு ஆராய்ச்சிப் பிரிவு ஏற்படுத்தலாமென்று குழு சிபாரிசு செய்திருக்கிறது. ஒரு தடவை வைக்கப்பட்ட பாட புத்தகங்களை மூன்று வருடங்களுக்கு மாற்றக்கூடாது.

### ஏன் இந்த நிலைமை?

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் தேக்கமும், விரயமும் நிறைய இருப்பதாகக் குழு கருதுகிறது. ஒரு குழந்தை ஒரே வகுப்பில் பல வருடங்கள்வரை தங்கிவிடுகிறது—அல்லது, கொஞ்ச காலம் படித்துவிட்டு, பள்ளிக்கூடத்தையே விட்டுவிடுகிறது; இதைத் தவிர்க்க வேண்டும். முதல் வகுப்பில்தான் இந்தத் தேக்கம் மிக அதிகமாக இருக்கிறது; சில சமயங்களில், 40 சதவிகிதம்கூட இருக்கிறது.

காலம் தாழ்த்திப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது, சரிவர வகுப்புகளுக்கு வராமலிருப்பது, திறமையற்ற போதனை ஆகியவை இந்தத் தேக்கத்திற்கு முக்கிய காரணங்களாகும்.

தொடர்ந்து ஒரு குழந்தை பள்ளிக்கூடத்திற்கு வராமலே இருந்தால், அதன் பெற்றோர்களை ஆசிரியர் சந்தித்து விசாரிக்க வேண்டுமென்று குழு கருதுகிறது.

### சில யோசனைகள்

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு முதல் கல்வி போதிப்பது பற்றியும் குழு யோசனை கூறியிருக்கிறது.

கிண்டர்கார்டன், கர்சரி, மாண்டிசோரி முறை பள்ளிக்கூடங்களில் இது சம்பந்தமாகச் செய்யப்படும் வேலைகளைக் குழு பாராட்டியிருக்கிறது; ஆனால் இந்தப் பள்ளிக்கூடங்களில் பின்பற்றப்படும் முறைகள் இன்றைய தேவைகளுக்குத் தகுந்தாற்போல் மாற்றப்பட வேண்டும்.

சுறுசுறுப்பில்லாத, மந்த புத்தியுள்ள குழந்தைகளுக்காக விசேட பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்றும் குழு கூறுகிறது.

வளர்ச்சி பெறாத குழந்தைகளுக்காக இப்போது 15 பள்ளிகள் இருக்கின்றன. இவற்றில் 1,300 பிள்ளைகளும், பெண்களும் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றிய சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை இத்தமாதிரி குழந்தைகள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்களென்று சர்க்கார் புள்ளி விவரங்கள் சேகரிக்க வேண்டுமென்று குழு சிபாரிசு செய்திருக்கிறது.

பாடத் திட்டத்தில் மதப் போதனையைச் சேர்ப்பதை, குழுவின் முன்பு சாட்சியமளித்தவர்களில் பெரும்பாலானோர் ஆட்சேபித்தார்கள்; ஆனால் ஒழுக்கங்கள் பற்றி பயிற்சியளிப்பதை எவரும் ஆட்சேபிக்கவில்லை.

பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்கள் இன்னும் அதிகமாக்கப்படவேண்டும். உத்தேச பிராந்திய போர்டுகள், ஆரம்பப் பள்ளிகளைப் பரிசீலனை செய்ய ‘சூபர்வைசர்களை’ நியமிக்கலாம். இடைநிலைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை இன்ஸ்பெக்டர்களாக நியமிப்பதை நிறுத்திவிட வேண்டும்; மாவட்ட கல்வி அதிகாரிகள் இன்னும் அதிகமாக நியமிக்கப்படவேண்டும்.

ஆதாரக் கல்வியின் முக்கிய அம்சங்களான சுகாதாரப் பழக்க வழக்கங்கள், தன்னம்பிக்கை, கலாசார, பொழுதுபோக்கு நடவடிக்கைகள்—ஆகியவற்றை, எல்லா ஆரம்பப் பள்ளிக் கூடங்களின் பாடத் திட்டத்திலும் சேர்க்க வேண்டும்.

பள்ளிக்கூட நாட்களையோ, தினசரி வேலை நேரத்தையோ குறைப்பதற்கு நியாயமில்லை.

சந்தாப் பள்ளிப் படிவங்களும், இடைநிலைப் பள்ளிகளின் ஆரம்பப் பிரிவுகளும் படிப்படியாக ஆதாரக்

(4-ம் பக்கம் பார்க்க)

# மாநிலப் புது அமைப்புத் திட்டம்: பொதுச்செயலாளர் அறிக்கை

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பீருமேடு தாலுகாக்களிலும், நெய்யாற்றங்கரைத் தாலுகாவின் பெரும் பகுதியிலும், சித்தூர் தாலுகாவிலும் தமிழர்கள் பெரும்பான்மையராக இருந்தும், அங்கெல்லாம் நடைபெற்ற தேர்தல்கள் தமிழர்களையே தேர்ந்தெடுத்து, அவை தமிழ்ப் பகுதிகள்தாம் என்பதை விளக்கியிருந்தும், பசில் குழு, அவற்றைக் கேரளத்தோடு சேர்க்க முற்பட்டிருப்பது கண்டனத்துக்குரியதேயாகும்; கொள்ளேகாலம்—பெரும்பான்மையான கன்னடியர்களால் நிறைந்திருக்கிறது—என்று தாலுகா ரீதியில் கணக்கிட்டு, அதனைக் கன்னடத்தோடு சேர்க்க முற்படும் பசில் குழு, தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய தாலுகாக்களைத் தமிழகத்தோடு சேர்க்காமலிருப்பது என்ன முறையின்பாற்பட்டதோ தெரியவில்லை;

"தமிழகத்தின் வடக்குப் பகுதியில் ஆந்திர மாநிலத்தில் சிக்கிக் கிடக்கும் தமிழ்ப் பகுதிகள், தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்பதை, பிரச்சினையை அணுக இருக்கும் இந்திய அரசாங்கமானாலும் சரி—அல்லது, ஆந்திரா - சென்னை அரசாங்கங்களானாலும் சரி - அவை, தம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

"கருநாடகத்தை ஒட்டித் தொடர்ந்தாற்போல் உள்ள கன்னடம் பேசும் பகுதிகள் ஆந்திராவில் சேர்க்கப்பட்டிருந்தாலும், கேரளத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலும் அவை சம்யுக்த கருநாடகத்தோடு சேர்க்கப்பட வேண்டியதோடு, ஐதராபாத்தில் இருக்கும் கன்னடப் பகுதிகளும் கருநாடகத்தோடு சேர்க்கப்பட வேண்டும் என்பதே நியாயமாகும்; பசில்அலி குழு, இவைகளைக் கவனிக்காதது பெருந் தவறாகும்;

"அதுபோலவே, ஐதராபாத்திலுள்ள தெலுங்குப் பகுதிகள் ஆந்திரத்தோடு சேர்க்கப்பட்டு, 'விசாலாந்திரம்' உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என்பதும் நியாயமே; பசில் குழு அறிக்கையில் கண்டபடி, கன்னடம் - தெலுங்கு - மராட்டியம் பேசப்படும் பகுதிகள், 'ஐதராபாத்' என்ற பெயரில் ஒன்றாக வைக்கப்பட்டு, 1961-ம் ஆண்டு பொதுத் தேர்தலின் முடிவுக்கு விடப்படுவது முறையாகாது; ஐதராபாத்திலுள்ள அந்தந்த மொழிப் பகுதிகள் அந்தந்த மொழி மாநிலங்களோடு சேர்க்கப்பட வேண்டும் என்பது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்;

"பிரெஞ்சு ஆட்சியிலிருந்த திட்டுக்களின் வருங்காலம் பற்றி ஏதும் தெரிவிக்காமலிருப்பது வருந்தத்தக்கது; புதுவை, காரைக்கால் பகுதிகள் தமிழகத்துடனும், மாகி பகுதி கேரளத்துடனும், ஏனாம், ஆந்திரத்துடனும் சேர்ப்பதற்கான முயற்சிகள் படிப்படியாக எடுக்கப்பட வேண்டும் என்பதை, இதுபோது, ஆட்சியாளர் நினைவுபடுத்திக்கொள்வது நல்லது;

"சுயநல நோக்கத்திற்காகச் சில முதலாளிகளால் பரப்பப்பட்டிருக்கும் 'தட்சிணப் பிரதேசம்' என்ற அமைப்பை, கேரளப் பொது மக்களும், தமிழகப் பொது மக்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்ற காரணங்காட்டி, அதனை ஒப்புக்கொள்ளாமல் விட்டுவிட்ட பசில் குழுவின் செயல் வரவேற்கத் தக்கதாகும்;

"புதிய மாநில அமைப்பில், தமிழ் பேசும் மக்கள் அடங்கிய பகுதியைச் சென்னை மாநிலம் என்று அழைப்பதை யாரும் விரும்பவில்லை — விரும்பமாட்டார்கள்; எனவே, அதனைத் தமிழகம் என்றோ, அல்லது தமிழ் நாடு என்றோ அழைக்க வேண்டும்; அந்தப்படிக்கு பசில் குழுவின் அறிக்கை திருத்தப்பட வேண்டும்;

"மாநிலத்தில் அரசாங்க அலுவல் பதவிகளில் பாதி அளவு வெளி மாநிலத்தாருக்கு ஒதுக்கி வைக்கப்படவேண்டும்—என்று அறிக்கை கூறுவதையும், உயர் நீதிமன்ற நீதிபதிப் பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு வெளி மாநிலத்தாருக்கு ஒதுக்கிவைக்கப்பட வேண்டும் என்று அறிக்கை கூறுவதையும், திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாக மறுக்கிறது; மாநில அரசாங்கப் பதவிகளைப் பொறுத்து, முழுச் சலுகைகளும் அந்தந்த மாநிலத்தாருக்கே அளிக்கப்பட வேண்டும்; மத்திய அரசாங்க அலுவல்களைப் பொறுத்து, மாநிலங்களுக்குச் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்; மாநிலங்கள், தம்மிடம் ஆட்கள் இல்லாத நிலையில், தேவையான நிபுணர்களை 'வெளி மாநிலங்களிலிருந்தோ—வெளி இடங்களிலிருந்தோ வேண்டுமானால் வரவழைத்துக் கொள்ளலாம்;

"தென்னகத்தில், இந்திப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று பசில் குழு அறிக்கை கூறுவது அவசியமற்ற கூற்றாகும்; தென்னகத்திற்கு அது கிஞ்சிற்றும் அவசியமற்ற ஒன்றாவதோடு, தென்னக மொழிகளின் வளர்ச்சியை அது பாதிக்கக்கூடியதாகவும் அமைந்துவிடும்; எனவே, அப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்திற்குத் தென்னகத்தில் அவசியமில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது; 'வடநாட்டில் தென்னக மொழி ஒன்றைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தில் வைக்க வேண்டும்,' என்று பசில் குழு கூறுவது, வெறும் கண்துடைப்பு வேலையாகும்; அதனால் திராவிடத்துக்கு ஒரு பலனும் இல்லை.

"மொழிவழி மாநிலங்களை எல்லைக் கமிஷன்களின் உதவியோடு அமைக்க பசில் குழு சிபாரிசு செய்திருக்குமேயானால், இப்பொழுது இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பு நிலைகள் ஏற்பட வழி பிறந்திருக்காது;

"தென்னகத்தில் மொழிவழி மாநில அமைப்புக்காக நியாயமான அடிப்படைக் கிளர்ச்சிகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கி உருவான பலன் காண முயலும்;

"மொழிவழி மாநில அமைப்பையும், சுதந்திர ஜனநாயகத் திராவிடக் கூட்டாட்சியின் தோற்றத்தையும், திராவிட முன்னேற்றக் கழகம், கோரிக்கை நிறைவேறும் வரையில் வலியுறுத்திவரும்."

'அறிவகம்'
இராயபுரம்
சென்னை - 13.
14—10—'55

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்

# நேசமணி—காமராசர் உரையாடல்

## திரு-தமிழக காங்கிரஸ் தூதுக் குழு இந்தியப் பிரதமரைச் சந்திக்கும்

சென்னை, அக். 16—

பிரதமர் நேரு, உள்நாட்டு மந்திரி, காங்கிரஸ் மேலிடத்தார் ஆகியோரை சந்திப்பதற்காக திரு-தமிழக காங்கிரஸ் தூதுக் குழு ஒன்று, நவம்பரில் டில்லி செல்லும் என்றும், தூதுக் குழுவினர் திரு-கொச்சியில் உள்ள எல்லாத் தமிழ் பகுதிகளையும் சென்னையுடன் இணைக்கவேண்டும் என்று கோருவர் என்றும் திரு-தமிழக காங்கிரஸ் தலைவர் நேசமணி தெரிவித்திருக்கிறார்.

இன்று காலை இங்கு வந்த நேசமணி, முதன் மந்திரி காமராசரைச் சந்தித்து உரையாடியிருக்கிறார்.

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சின்-சித்தூர் ஆகிய தாலுகாக்களையும் சென்னையுடன் இணைப்பதற்கு, சென்னை சர்க்கார் தங்களாலான அத்தனையையும் செய்யவேண்டுமென, நேசமணி, காமராசரிடம் வற்புறுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

'மாநிலக் குழுவினர், திரு-கொச்சியில் உள்ள ஒன்பது தமிழ் தாலுகாக்களில் ஐந்தினை மட்டும் தமிழகத்துடன்சேர்த்து நான்கினை கேரளத்துடன் இணைத்திருப்பதின் மூலம் தமிழர்களுக்கு பெரும் அநீதி இழைத்திருக்கிறது' என்று அவர் தெரிவித்திருக்கிறார்

துருக்கி—ஈராக் ஒப்பந்தத்தில் சேருவதற்கு ஈரான் முடிவு செய்ததற்கு, ரஷ்யா தெரிவித்திருந்த ஆட்சேபனையை ஏற்க முடியாது என்று கூறி, ஈரான் நிராகரித்துவிட்டது.

# சேலம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு

"சேலம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், 23—10—55 மாலை 3 மணிக்கு, சேலம்-கோயம்பத்தூர் லாட்ஜ், சாந்தி நிகேதனில் நடைபெறும். அது சமயம் பொதுக் குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறும்," என்று, சேலம் மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் ப. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

### திருக்குறள் வகுப்பு

18—10—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 15, முத்து கிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும். 'காலம் அறிதல்' என்பது குறித்து, திரு. மயிலை சிவமுத்து சொற்பொழிவாற்றுவார்.

### திருமணம்

19-10-55 காலை 10 மணிக்கு, முத்தப்பேட்டையில், மணமகன் இல்லத்தில், தோழர் கோவிந்தராசன்—தோழியர் சுலோசனா திருமணம், தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெறும்.

# கழகக் கூட்டங்கள்

★

### திருவண்ணாமலை

19-10-55 மாலை 6½ மணிக்கு
பேசுபவர்:
மு. கருணாநிதி
(கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்)

★

### கோவை

19—10—55 மாலை 7 மணிக்கு, கோவை-காட்டூர், ஆர். சி. எம். லே அவுட்டில் நடைபெறும். தோழர்கள் கோவை செழியன், எஸ். ஏ. ராசமாணிக்கம், சி. டி. தண்டபாணி, கோவை அரசு ஆகியோர் பேசுவர்.

# சென்னை ஆரம்பக் கல்விக் குழு....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி முறைக்கு மாற்றப்படவேண்டும். ஆரம்ப வகுப்புகளில் பரீட்சார்த்தமாக இப்படி மாற்றலாம்.

வழக்கமாக உற்பத்திகளை ஆரம்பிப்பதை: ஆதாரப்பள்ளிகளின் 3-வது கிரேடுகளிலிருந்து தொடங்குவது நல்லது.

1, 2 கிரேடுகளில், ஏதாவது சாமான் உற்பத்தி செய்யவேண்டுமென்பதில்லாமல் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

பெரும்பாலான ஆதாரப் பள்ளிகளில் தோட்ட வேலையை முக்கியமாகக் கொள்ளலாம். மண் பாத்திரங்கள் செய்தல், பாய் பின்னுதல் ஆகியவைகளை சாத்தியமான இடங்களில் ஆரம்பிக்க வேண்டும்; மூலப் பொருள்களின் விலையில் ஒருபகுதியைக் கொடுத்துவிட்டு இந்தச் சாமான்களை மாணவர்களே உபயோகித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

### நிர்வாக மாறுதல்கள்

பள்ளிக்கூடங்களின் நிர்வாகம் பற்றியும் குழு முக்கியமான மாறுதல்களைச் சிபாரிசு செய்திருக்கிறது.

தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு ஒரு நிர்வாகக் குழு இருக்க வேண்டும்; அந்தத் தேதியிலிருந்து பள்ளியின் நிர்வாகம் அந்தக் குழுவிடம் விடப்பட வேண்டும்; ஆசிரியர்களால் நிர்வகிக்கப்படும் பள்ளிகளுக்கும் இந்த ஏற்பாடு பொருந்தும். இந்த நிர்வாகக் குழுக்களுக்கு ஒன்றிரண்டு பிரதிநிதிகளை சர்க்கார் நியமிக்க வேண்டும் எந்தப் பள்ளியாவது, இம்மாதிரி குழுவை நியமிக்காவிட்டால், அதன் நிர்வாகம், பிராந்திய போர்டிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பல நிறுவனங்களை நிர்வகிக்கும் குழுவினர் (உதாரணமாக, மிஷனரி சங்கங்கள் போன்றவை) ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கென்று ஒரு தனி நிர்வாகக் கவுன்சிலை ஏற்படுத்த வேண்டும்; இதன் அமைப்பை சர்க்கார் அங்கீகரிக்க வேண்டும். இந்தக் கவுன்சிலுக்கும் சர்க்கார் ஒன்றிரண்டு பிரதிநிதிகளை நியமிப்பார்கள்.

### 'பிராந்திய போர்டு' அதிகார எல்லை

நகரசபைகள் தொடர்ந்து ஆரம்பப் பள்ளிகளை நிர்வகிக்கலாம்; இதற்கு சர்க்கார் எல்லா உதவிகளும் செய்து தரவேண்டும்.

மாவட்ட போர்டுகள், பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்திலுள்ள பள்ளிக்கூடங்களின் நிர்வாகத்தை பிராந்திய போர்டுகள் மேற்கொள்ள வேண்டும் பிராந்திய போர்டின் அதிகார எல்லை குறுகியதாக இருக்கலாகாது; மிகவும் விரிவானதாகவும் இருக்கலாகாது. ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இப்போது மாவட்ட போர்டுகளுக்கு உள்ள அதிகாரங்கள் இந்தப் பிராந்திய போர்டுகளுக்குக் கிடைக்கும்.

இந்த போர்டின் ஆயுட்காலம் மூன்று வருடங்கள்; இதில், ஒன்பதுக்குக் குறையாத உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்களில் நால்வர் மாவட்டக் கழகப் பிரதிநிதிகள்; இந்த நால்வரும் மாவட்டக் கழக உறுப்பினர்களாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை; அதன் சார்பாக வெளியார்களையும் நியமிக்கலாம். சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் சார்பாக மூன்று உறுப்பினர்கள். கல்வியில் அக்கறையுள்ள இருவரை சர்க்கார் நியமிப்பார்கள். பிராந்திய போர்டின் தலைவரே பிரதம நிர்வாக அதிகாரியாக இருப்பார். இவரை குழுவினர் தேர்ந்தெடுக்க வேண்டும் இந்தப் போர்டுக்கு ஒரு முழுநேரக் காரியதரிசி இருக்கவேண்டும்; அவருடைய சம்பளம், யோக்கியதாம்சம் போன்ற விவரங்களை சர்க்கார் நிர்ணயிக்கலாம்.

மாவட்டக் கழகங்களின் வருமானத்தில், 'ஆரம்பக் கல்வி நிதி' என்ற இனத்தின் கீழ்வரும் பணம் பிராந்திய போர்டுக்கு மாற்றப்படும்."

### ஒரு குறிப்பு

குழுவினர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில், குழுவில் ஒரு உறுப்பினரான திரு. எம். அருணாசலம், ஒரு ஆட்சேபக் குறிப்பு சமர்ப்பித்திருக்கிறார்.

ஆதாரக் கல்வி இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறதென்றும், சமீபகால கல்வி அனுபவங்களைக் கொண்டு இதைப் புனராலோசனை செய்யவேண்டுமென்றும், ஆகவே, கல்விக்காகக் கிடைக்கும் பெரும் தொகைகளை விளையாட்டு மைதானங்கள், ஆசிரியர்களுக்கு உதவி, நூல் நிலையம் போன்றவைகளுக்காகச் செலவிட வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

கிராமங்களுக்காக ஒரு தனி ஆரம்பக் கல்வி முறையை உருவாக்கலாமென்ற யோசனையை விட்டுவிட வேண்டுமென்றும், இப்போது ஆசிரியர்களும், பெற்றோர்களும், ஆதாரக் கல்விபற்றி அவநம்பிக்கை கொள்கிறார்களென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# வட சென்னையில்

### தி. மு. க. பொதுச்செயலாளர்

# இரா. நெடுஞ்செழியன்

★

20-10-55 மாலை 6 மணிக்கு, சென்னை-இராயபுரம், மீனாட்சியம்மன்பேட்டை, இராமா நாய்க்கன் தெருவில், வட சென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்ற முதலாண்டு விழா, தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் பேசுவர்.

கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.